5. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்.

(அ) பெருமழை காரணமாக திருவில்லிபுத்தூர் தொகுதியில் விவசாய நிலங்களில் மணல் மூடியதன் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, "அண்மையில் பெய்த பெரும் மழையால், திருவில்லிப்புத்தூர் தொகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாய நிலங்களை மணல் மூடிவிட்டதால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட கடும் மழையால் 301 கிராமங்களில் விளை நிலங்களில் மணல் மேடிட்டு, விவசாயம் செய்ய லாயக்கற்ற நிலை ஏற்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கைகள் வரப் பெற்று, அரசு தனது ஆணை எண். எம். எஸ். 213 நாள் 6—2—1979-ல் மேற்கண்ட நிலங்களைச் சீர்திருத்தம் செய்ய ஆணையிட்டது.

வேளாண்மைத் துறையின் பொறியியல் பிரிவு பொறியாளர்கள் மேற்கண்ட கிராமங்களில் விரிவான நில அளவு செய்ததில், திருவில்லிப்புத்தூர் தாலுகாவிலிருக்கும் 10 கிராமங்களில் சுமார் 170 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. வேளாண்மைத் துறையினர் உடனடி நடவடிக்கைகள் மேற்கொண்டனர் இச்சேதத்தின் மதிப்பு ரூபாய் 42,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட 170 ஏக்கர் நிலத்தில் 16—2—1979 வரை ரூபாய் 21,600 மதிப்புள்ள சீர்திருத்தப் பணிகள் 36·32 ஏக்கர் நிலங்களில் செய்யப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையினர் வசமுள்ள 2 மண் தள்ளும் இயந்திரங்கள் (புல்டோசர்) தற்சமயம் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மகாராஜபுரம், வெள்ளப்பொட்டல ஆகிய இரு கிராமங்களிலும் பணிகள் முடிவடைந்துள்ளன. கோவிந்தநல்லூர் கிராமத்தில் தற்சமயம் பணிகள் நடைபெற்று வருகின்றன. இம்மாத இறுதிக்குள் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடனடியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்பாடு செய்த முதல் அமைச்சர் அவர்களுக்கும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட கலெக்டர் அவர்

களுக்கும், நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மணல்மேட்டிலுள்ள நிலங்களிலே மணலை அப்புறப்படுத்துவதற்கு செய்யப்படும் இந்த ஏற்பாடு முழுவதும் மானியமா, பாதி மானியமா அல்லது ஒரு ஏக்கருக்கு எவ்வளவு மானியம்? தவிர, 3 ஏக்கருக்கு குறைந்தவர்களுக்கு முழுவதும் இனாமாக இந்த வேலை செய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழ் நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு என்னென்ன சலுகைகள் அளிக்கப் பட்டது என்பது அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, இந்த செயல்முறைகள் நடந்து வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலுள்ள சிற்றாறுகளால் ஏற்படும் மணல் அரிப்பைத் தடுக்க அரசு என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறது? இந்த மண் அரிப்பைத் தடுத்து, நீர்ப்பாசன வசதி செய்ய, ஆங்காங்கே செக் டாம்கள் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் வறட்சிக்கு இலக்கான பிரதேசம். எங்கெங்கே தடுப்பு அணைகள் கட்ட முடியுமோ, அங்கங்கே ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. கசிவு நீர் குட்டைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இது போன்ற பாசன வசதிகளை எல்லாம் செய்து வருகிறோம்.

(ஆ) 'கோக்' கரி கிடைக்காததால், கோவை, கோவை நகரைச் சுற்றியுள்ள பவுண்டரிகளில் வேலை பாதிக்கப் பெற்றுள்ளது குறித்து.

திரு. கு. ரமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோவை நகரத்திலும், அதன் சுற்று வட்டாரத்திலும் 300-க்கும் அதிகமான பவுண்டரிகள் 'கோக்' கரி இல்லாததால் வேலை நடக்காமல் முடங்கி சில ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமலும், தொழில் உற்பத்தி முடங்கியும் உள்ளதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கு தேவையான கோக்கரியை (Coke) கல்கத்தா நகரில் உள்ள நிலக்கரி அனுப்பும் இயக்குநரிடமிருந்து (Director, Transportation, Coal) பெறுவதற்